ட்டத்தைக் கொண்டு வந்ததும், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் நீதி மன்றத்திற்கு போகாமல் இருக்கும் வகையிலே அதை நல்ல முறையிலே கொண்டு வந்திருக்க வேண்டும்; எனவே, நீங்கள் முன்கூட்டியே அதிலே எச்சரிக்கையாக இருக்கவில்லை என்று கேட்பது சரியில்லை. இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று பரிகாரம் பெற உரிமை பெற்றவர்கள் என்பதை அம்மையார் அவர்கள் மறந்துவிடக் கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி: மக்கள் பாதிக்கப்படும் நிலையிலே இல்லாமல், அந்தச் சட்டத்திலே ஓட்டை உடைசல் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். சட்டங்கள் சட்டசபை உறுப்பினர்களுக்கு முன்னால் வருவதில்லை. அந்த ஆர்டினன்ஸ் அறிவிக்கப்பட்டது 14-ஆம் தேதி. எங்களுக்கு 19-ஆம் தேதி தான் வருகிறது. இவ்வளவு கால தாமதம் ஏற்படுகிறது. நான் கூட இரண்டுமுறை பில்ஸ் செக்ஷனிலே வந்து கேட்டுவிட்டுப் போனேன். எங்களுக்கே வரவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். ஏன் இப்படி காலதாமதம் ஆகிறது என்று தெரியவில்லை. நீதி மன்றத்திற்குப் போவது என்பது வழக்கறிஞர்களுக்கும் கட்சிக்காரர்களுக்குமுள்ள பிரச்னை. இதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நல்லது சொன்னேன், இதை எல்லாம் தவிர்த்திருக்கலாம் என்பதற்காக. கேட்கவில்லை என்றால், அதைப்பற்றிக் கவலையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒழுங்குப் பிரச்னை கொண்டு வந்ததின் முக்கிய கருத்து, ஐந்து நாட்கள் இதிலே அவகாசம் தரப்படவில்லை என்பதுதான்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இது "சப் ஜுடிஸ்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: "நோ சப் ஜுடிஸ்".

திரு என். கணபதி: மத்திய அரசாங்கம் கொண்டு வந்த பாங்க் நேஷனலைசேஷன் ஆர்டினன்ஸ்ஸை எதிர்த்து ஒரு வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்கு பம்பாயைச் சேர்ந்த ஆர். எஸ். கூப்பர் என்பவர் எடுத்துச் சொல்லுகிறார். அந்த வழக்கு அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது, இந்திய பாராளுமன்றத்திலே அது சட்டமாக நிறைவேறப்பட்டது. அப்பொழுது, இந்திய தலைமை நீதி மன்றம் கருத்துச் சொல்லக் கடமைப்பட்டு, இந்த ஆர்டினன்ஸ் சம்மந்தமாக கோர்ட்டிலே கேசு நடக்கும்பொழுது அதைச் சட்டமாக நிறைவேற்றுவது சட்ட விரோதமில்லை, நீதி மன்ற விதிகளுக்கு புறம்பானதில்லை என்று சொன்னதாக நான் அறிகின்றேன். ஆகவே, அந்த வகையிலே இது சப்-ஜுடிஸ்ஸா அல்லது இதிலே சட்ட சிக்கலோ இருக்காது என்று சொல்லிகொள்கிறேன்.

THIRU M. A. LATHEFF: The question has been raised here that sufficient time must be given to the Members to go into the various provisions of the intended Bill to be introduced so that the Members can get sufficient time to give serious consider ation and to get a proper